## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

# CRS 3104 Education and Religion

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி-I ல் இருந்து இரு வினாக்களுக்கும், பகுதி-IIல் இருந்து இரு வினாவுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி-I

01.(அ) கல்வியின் பல்வேறு மாதிரிகளையும் குறிப்பிட்டு, அவை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

(ஆ) கல்விக்கும், சமயக்கல்விக்கும் இடையிலான தொடர்புகளைத் தெளிவுபடுத்துக. (13 புள்ளிகள்)

02. வேதகாலக் கல்விப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) குருகுலக் கல்வி முறை (15 புள்ளிகள்)

(ஆ) கலைக்கழகம் (05 புள்ளிகள்)

(இ) மன்றக் கூடுகை (05 புள்ளிகள்)

03. ஆரம்பகால இஸ்லாமிய சமயக் கல்விமுறையினைப் பின்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) மஃதப் (10 புள்ளிகள்)

(ஆ) மாளிகை (10 புள்ளிகள்)

(இ) அறிஞர் இல்லம் (05 புள்ளிகள்)

## பகுதி-II

04. பௌத்த தத்துவக்கல்வியானது 'ஒழுக்க வாழ்வு' சார்ந்தவகையிலேயே அமைந்திருந்தது. இவற்றைப் புத்தரின் கல்வி போதனையை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

(25 புள்ளிகள்)

05. இந்துசமய மரபில் அமையப்பெற்ற ஆச்சிரமக் கல்வி முறையினைக் காந்தீய ஆச்சிரமத்தினை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

(25 புள்ளிகள்)

06. புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டுக் கல்வி முறையினை அடிப்படையாகக்கொண்டு கிறிஸ்தவக் கல்விப் பாரம்பரியத்தினை ஆராய்க.

(25 புள்ளிகள்)